


03.12. 2024

தலைப்புச் செய்திகள்

- நாட்டு மக்களுக்கான அரசியல் அமைப்பு சாசன கொள்கைகளை நிறைவேற்றும் வலுவான கருவியாக புதிய குற்றவியல் சட்டங்கள் திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- நாடாளுமன்ற இரு அவைகளும் 5 நாள் தேக்கநிலைக்கு பின்னர் இன்று இயல்பான அலுவல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.
- தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயல் வெள்ளத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா 5 லட்ச ரூபாய் இழப்பீட்டு தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.
- சாத்தனூர் அணை தொடர்பான அரசின் துரித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால், உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெளிவுபடுத்தியுள்ளார்.
- திமுக அரசு உரிய முன்னெச்சரிக்கை விடுக்காததால் தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்கள் பாதிக்கப்பட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டு மக்களுக்கான அரசியல் அமைப்பு சாசன கொள்கைகளை நிறைவேற்றும் வலுவான கருவியாக புதிய குற்றவியல் சட்டங்கள் திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் சண்டிகடில் புதிய குற்றவியல் சட்டங்களின் வெற்றிகர செயலாக்கம் குறித்த நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய பிரதமர், இந்த புதிய சட்டங்களால் காலனி ஆதிக்க முறைகளிலிருந்து இந்தியா சுதந்திரம் பெறுவதாக எடுத்துரைத்தார்.

புதிய குற்றவியல் சட்டங்கள் செயலாக்கத்திற்காக பஞ்சாப், ஹரியானா நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு பிரதமர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா, மக்களுக்கு நீதி கிடைக்க புதிய குற்றவியல் சட்டங்கள் இந்தியர்களால் இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது என்று பெருமிதம் தெரிவித்தார்.

முன்னதாக பிரதமர் திரு.நரேந்திரமோடியும், திரு.அமித்ஷாவும் பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாக்ஷிய அதிநியம் என்ற 3 புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான கண்காட்சியை பார்வையிட்டனர்.

புதிய குற்றவியல் சட்டங்கள் செயலாக்கம் தொடர்பான காவல்துறையினரின் விசாரணை முறைகளையும் இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர்.

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு அனைத்து உதவிகளும் கிடைப்பதற்கான அனைத்து திட்டங்களையும் மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய மாற்றுத்திறனாளிகள் விருதுகளை வழங்கி பேசியஅவர், சமூகத்திற்கு சிறந்த வழிகாட்டியாக திகழ்வதற்கான அடையாளமே அவர்களுக்கு வழங்கப்படும் விருதுகள் என்று எடுத்துரைத்தார்.

இவ்விருதுகள் நாடெங்கிலும் உள்ள மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு உத்வேகத்தை வழங்குவதோடு, அவர்கள் செயலாற்றுவதற்கு தேவையான வலிமையையும் வழங்கும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

உள்ளடக்கிய வளர்ச்சியுடன் நீடித்த எதிர்காலத்திற்கான தலைமைத்துவத்தை மாற்றுத்திறனாளிகள் பெறவேண்டும் என்ற இந்த ஆண்டின் கருப்பொருளை சுட்டிக்காட்டிய குடியரசு தலைவர், மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு தேவை அனுதாபம் அல்ல! இரக்கமே ! என்று எடுத்துரைத்தார்

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் ஆளுமைக்காக செயலாற்றிய 33 பேருக்கு விருதுகளை குடியரசு தலைவர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் – மாற்றுத்திறனாளி தினம்

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளையும் நலனையும் பாதுகாப்பதுடன் நல்ல வேலைவாய்ப்புகளுடன் உயர் பதவிகளுக்கு செல்லவேண்டும் என்ற நோகத்துடன் அரசு செயலாற்றி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளப்பதிவில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் சவால்களை கடந்த வெல்ல மாற்றுத்திறனாளிகளுக்கு பாதை அமைத்து கொடுப்பது நமது கடமை என்று அவர் கூறியுள்ளார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மாற்றுத்திறன் படைத்தவர்கள் நலன் சார்ந்த நிகழ்வுகள் இன்று நடைபெறுகின்றன.

திருச்சியில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர்களுக்கான சிறப்புத்திட்டங்களை எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

வெளிநடப்பு

நாடாளுமன்ற இரு அவைகளும் 5 நாள் தேக்கநிலைக்கு பின்னர் இன்று இயல்பான அலுவல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அரசுக்கும் எதிர்கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை அடுத்து இன்று கேள்வி நேரம் மற்றும் பூஜ்ஜிய நேரத்தில் பொதுநலம் சார்ந்த பிரச்சனைகள் எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டன.

இருப்பினும், இரு அவைகளிலும் எதிர்கட்சியினர் சம்பல் வன்முறை, வணிக நிறுவனத்திற்கு எதிரான ஊழல் குற்றசாட்டு பிரச்சனைகளில் சிறிது நேரம் வெளிநடப்பில் ஈடுபட்டன.

❖❖❖❖❖❖❖❖

கிரிராஜ் சிங்

நெசவாளர்களுக்கான நலத்திட்டங்களை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதால் தேசிய நெசவாளர் ஆணையம் அமைப்பதற்கான உத்தேசம் அரசுக்கு இல்லை என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், நெசவாளர்களுக்கு மத்திய அரசு உரிய நிதியுதவிகளை வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள 26 லட்சம் நெசவாளர்களில் 72 சதவிகிதம் பேர் பெண்கள் என்றும் அவர் கூறினார்.

சிறு மற்றும் பெரு குழு மேம்பாட்டு திட்டங்கள், கைத்தறி சந்தை உதவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் நெசவாளர்களுக்காக செயல்படுத்த படுவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

சந்திரசேகர்

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் கீழ் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த 10 ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விக்கு இன்று பதிலளித்த அவர், 2013-14ம் ஆண்டு இத்திட்டத்திற்கு 33 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது இதற்கு 87 ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

கோவிட் அச்சுறுத்தலின் போது இத்திட்டத்திற்காக ஒருலட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்ட பயனாளிகளுக்கு 43 சதவிகித அளவிற்கு ஊதியம் அதிகரித்து வழங்கப்பட்டு உள்ளதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

மக்களவையிலும், மாநிலங்களவையிலும் கேள்வி நேரத்தின்போது வெளியான சில தகவல்கள் :

பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை மத்திய அரசால் 3 முறை அதிகரித்து வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங்சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

உற்பத்தி விலையில் 50 சதவிகித லாபத்துடன் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இறக்குமதி பொருட்கள் கப்பல்களில் கொண்டுவரப் படுவதால் அவை காலதாமதமாவதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

சரக்கு பெட்டகங்கள் பற்றாக்குறை எதுவும் அறிவிக்கப் படவில்லை என்றும் தெளிவுபடுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது பதில் அளித்த மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா, நாட்டின் ஆரம்ப சுகாதார சிகிச்சை முறையை வலுப்படுத்த மத்திய அரசு தொடர்ந்து செயலாற்றிவருவதாக குறிப்பிட்டார்.

மனநலம் சர்க்கரை நோய், ரத்தகொதிப்பு, பல் உபாதைகள், புற்றுநோய் குறித்து முன்கூட்டியே கண்டறியும் பரிசோதனை முறையை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

அன்னபூர்ணா தேவி

மகளிர் தலைமையிலான மேம்பாட்டிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், அனைத்து துறைகளிலும் மகளிர் முன்னேறும் வகையில் அவர்களுக்கான தலைமைத்துவ வாய்ப்புகளை வழங்குவதே பிரதமரின் நோக்கம் என்று குறிப்பிட்டார்.

மகளிருக்கான திறன்களை மேம்படுத்தும் வகையில் தமது அமைச்சகம் திறன் மேம்பாட்டு அமைச்சகத்துடன் உடன்படிக்கை ஒன்றை கையெழுத்திட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

லட்சாதிபதி பெண்கள் மற்றும் ட்ரோன் பயிற்சி திட்டத்தால் ஊரக மகளிர் தற்சார்பு நிலையை எட்டியிருப்பதாக எடுத்துரைத்தார்.

3 புதிய குற்றவியல் சட்டங்கள் பற்றி குறிப்பிட்ட திருமதி. அன்னபூர்ணா தேவி மகளிருக்கு எதிரான வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதே அரசின் உயர் முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

நிவாரணம்

தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயல் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு இழப்பீடு மற்றும் நிவாரண உதவிகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதன்படி புயல் வெள்ளத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா 5 லட்சம் ரூபாய் இழப்பீட்டு தொகை வழங்கப்படுகிறது.

புயலால் சேதமடைந்த குடிசைகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர் உள்ளிட்ட இரவை பாசன பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 17 ஆயிரம் ரூபாயும்,

பல்லாண்டு பயிர்கள், மரங்கள் சேதமடைந்திருப்பின் இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு 22 ஆயிரத்து 500 ரூபாயும்,

மானாவரி பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 8 ஆயிரத்து 500 ரூபாயும் வழங்கப்படும்

எருது, பசு உள்ளிட்ட கால்நடைகளின் உயிரிழப்பிற்கு 37 ஆயிரத்து 500 ரூபாயும்,

வெள்ளாடு, செம்மறிஆடு உயிரிழப்பிற்கு 4 ஆயிரம் ரூபாயும்

கோழி வகை உயிரிழப்பிற்கு 100 ரூபாயும் வழங்கப்படுகிறது.

அதிகனமழையில் காரணமாக கடும் மழை பொழிவை சந்தித்த விழுப்புரம் கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரணமாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மழை வெள்ளம் பாதிக்கப்பட்ட மாணாக்கருக்கு புதிய பாட புத்தகங்களும், நோட்டு புத்தகங்களும் வழங்கப் படுவதோடு முக்கிய சான்றிதழ்கள் இழந்தோருக்கு சிறப்பு முகாம்கள் மூலம் அவை மீண்டும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்குவது தொடர்பாக தர்மபுரி, கிருஷ்ணகிரி திருவாண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பாதிப்பு விவரங்களை அரசுக்கு அனுப்பிவைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர் - முதலமைச்சர்

தமிழ்நாட்டில் புயல் மழை வெள்ள பாதிப்புகள் குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடி, முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலினிடம் தொலைபேசி வாயிலாக இன்று கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படுவது குறித்து பிரதமரிடம் எடுத்துரைக்கப்பட்டதாக சமூக வலைதளப்பதிவில் முதலமைச்சர் கூறியுள்ளார்

புயல் சேதங்கள் குறித்த விரிவான மதிப்பீட்டை மேற்கொள்ள மத்திய குழுவை அனுப்பி வைக்க கேட்டுக்கொண்டதாகவும், தமது கோரிக்கையை பிரதமர் பரிசிலித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும் முதலமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் தமிழகத்தின் புயல்பாதிப்பு குறித்து ஆய்வுசெய்ய மத்திய உள்துறை அமைச்சகம் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

துரைமுருகன்

சாத்தனூர் அணையின் நிலை குறித்து 5 கட்ட வெள்ள அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு, அரசின் துரித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால், பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெளிவுபடுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ∴பெஞ்சல் புயலால் நீர்பிடிப்பு பகுதியில் பெருமழை பொழிவு காரணமாக, சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததை அடுத்து, அணை நிரம்புவதை முன்கூட்டியே கணித்து தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் வெளியேற்றப்பட்டதாக அமைச்சர் விளக்கம் அளித்துள்ளார்.

மிக சாதுரியமாக செயல்பட்டு மக்களை அரசு பாதுகாத்துள்ளது என்பதை நீர் மேலாண்மை மற்றும் அணை பாதுகாப்பியல் வல்லுநர்கள் புரிந்துகொள்ள முடியும் என்று எடுத்துரைத்தார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள பட்டதால் தான் உயிரிழப்புகள் தடுக்கப்பட்டதாகவும், வீடு, விவசாய நிலங்கள் மட்டுமே நீரில் மூழ்கியுள்ளதாகவும் அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்தள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

திமுக அரசு உரிய முன்னெச்சரிக்கை விடுக்காமல் சாத்தனூர் அணையிலிருந்து ஒருலட்சத்து 68 ஆயிரம் கனஅடி தண்ணீரை திறந்து விட்டதால் தென்பெண்ணை ஆற்றங்கரையோரங்களில் வசிக்கும் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இதுதொடர்பாக தொலைக்காட்சியிலோ நாளிதழ்களிலோ, பொதுமக்களுக்கோ எவ்வித அறிவிப்பும் இல்லை என்று குறைகூறியுள்ளார்

இதன் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் நீரால் சூழ்ந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கும் போது உரிய எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும் என்பதற்கு மாறாக எச்சரிக்கை விடுக்கப்படாததே இதற்கு காரணம் என்றும் குறிப்பிட்டார்.

இது கடும் கண்டனத்திற்கு உரியது என்றும் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி:

பெஞ்சல் புயல் மழை காரணமாக, கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம் நிவாரண முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளவர்களுக்கு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் நிவாரண பொருட்களை இன்று வழங்கினார்.

கடலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை மாவட்ட நிர்வாகம் வழங்கி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் ∴பெஞ்சல் புயல் காரணமாக 17 ஏரிகள் நிரம்பியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று நண்பகல் 12 மணி நிலவரப்படி நீர்வரத்து 28 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக அருவி மற்றும் ஆற்றுப் பகுதிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து 9 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து பாசனத்திற்காக ஆயிரத்து 300 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளிலும், துணை நதிகளான பாலாறு, சின்னாறு, தொப்பையாறு நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்துவருவதாலும் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

❖❖❖❖❖❖❖❖

திருத்தேர் பவனி

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாறு புனித சவேரியார் பேராலயத்தின் ஆண்டு திருவிழாவை ஒட்டி திருத்தேர் பவனி வெகுவிமரிசையாக நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

மஸ்கட்டில் நடைபெறும் ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - மலேசியாவை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது